# 15. வீதிகளை சேதப்படுத்துவதற்கு அனுமதி கோரல் - செயல்வழிப் படம்

டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் செய்திகள்/ கொடுக்கல் வாங்கல்கள் (SMS / WhatsApp / e-mail)

தேவைப்பாட்டினை சபையின் இணையத்தளம் ஊடாக அல்லது முன் அலுவலகத்திற்கு சமூகமளித்து அறிவித்தல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

கோரிக்கையானது சபைக்குரிய வீதியாக காணப்படின், பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தை இணையத்தளம் ஊடாக அல்லது நேரடியாகக் கையளித்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

விண்ணப்பப் படிவத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு முன்வைத்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

இடப் பரிசோதனையைச் செய்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் விண்ணப்பப் படிவத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக பொறியியலாளர்/ செயலாளருக்கு முன்வைத்தல்

பொறுப்பு: தொழிநுட்ப உத்தியோகத்தர்

↓

கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதா?

**ஆம்**

செலுத்த வேண்டிய கட்டண அளவினைக் குறிப்பிட்டு கோரிக்கைக்கு அனுமதியளிக்கும் கடிதத்தினை முன் அலுவலகத்திற்கு முன்வைத்து செலுத்த வேண்டிய கட்டண அளவினை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

பொறுப்பு: விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

↓

வீதியை சேதப்படுத்தி விட்டு இயல்பு நிலைக்கு மாற்றும் கட்டணத்தை அறவிட்டு பற்றுச்சீட்டு மற்றும் அனுமதிக் கடிதத்தை வழங்குதல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

பணி முடிவுறுத்தப்பட்டது என்பதை அறிவித்தல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

வீதியை இயல்புநிலைக்கு மாற்றுதல் மற்றும் செலவினத்தை அறிக்கையிடுதல்

பொறுப்பு: தொழிநுட்ப உத்தியோகத்தர்

→

வீதியை இயல்புநிலைக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை செலவினத் தலைப்புக்கு வைப்புச் செய்து விட்டு மீதியை விண்ணப்பதாரிக்குச் செலுத்துதல்

பொறுப்பு: விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

**இல்லை**

கோரிக்கை நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

பொறுப்பு: விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

කාර්යසාධක දර්ශකය



# 15. வீதியை சேதப்படுத்துவதற்கு அனுமதி கோரல்

## 1. அறிமுகம்

அதிகாரப் பிரதேசத்தினுள் வதியும் ஒருவரினால் குடிநீர் இணைப்பு, மின்சக்தி இணைப்பு, தொலைபேசி அல்லது வேறு வகையான தொலைத்தொடர்பு இணைப்பு அல்லது வேறு சேவைகள் இணைப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது அல்லது அந்த இணைப்புச் சேவைகள் அல்லது வேறு சேவை இணைப்புச் சேவைகளை வழங்குகின்ற ஏதேனும் சேவை மேம்பாட்டு நிறுவனத்தினால் அந்த ஏதேனும் இணைப்பினை வழங்கும்போது இல்லாவிடின் ஏற்படுத்தும்போது, ஏற்புடைய இணைப்பினைப் பெற்றுக்கொள்வதை அல்லது வழங்குவதை உள்ளூராட்சி நிறுவனத்திற்குச் சொந்தமான வீதியொன்றை சேதப்படுத்தி நிலத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில், ஏற்புடைய வீதிக்கு ஏற்படுத்தப்படும் சேதத்தினை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்குச் செலவாகும் தொகையினைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகும். சந்தர்ப்பத்திற்கேற்ப சேவை வழங்குனர் அல்லது சேவை பெறுநரினால் இத்தொகை சபைக்குச் செலுத்தப்பட வேண்டும்.

## 2. சட்டரீதியான அதிகாரம்

(அ) 252 ஆம் அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(1)(ப) பந்தி;

(ஆ) 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(ஒ) பந்தி;

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (xxxii) ஆம் பந்தி.

## 3. தகைமைகள்

(அ) சேவை வழங்கலைச் செய்யும்போது அல்லது சேவை இணைப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது உள்ளூராட்சி நிறுவனத்திற்குச் சொந்தமான வீதியொன்றைச் சேதப்படுத்த வேண்டியேற்படும் சந்தர்ப்பத்தில், சேவை வழங்குனர் அல்லது சேவை பெறுநர் இந்தக் கோரிக்கையை விடுப்பதற்குத் தகுதி பெறுவார்.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனத்திற்குச் சொந்தமான வீதிகள் சம்பந்தமாக மாத்திரம் இந்த வசதி ஏற்புடையதாகும்.

## 4. கட்டணம்

வீதியை நிர்மாணித்த கட்டுமானப் பொருட்களுக்கு ஏற்ப சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற கட்டணமொன்றை மற்றும் வைப்புத்தொகையொன்றைச் செலுத்த வேண்டும்.

குறிப்பு: வீதியை சேதப்படுத்திய பின்பு அதனை இயல்பு நிலைக்கு மாற்றும்போது, ஒரு கன அடிக்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பது, [வீதி நிர்மாணப் பொருட்களின் வகை (தார், கொங்ரீட், இடைத்தொடர்புக் கற்கள், அஸ்போல்ட் கொங்ரீட் - காபட் அல்லது ஏனைய] தொழிநுட்ப உத்தியோகத்தரினால் செய்யப்படும் பரிந்துரைக்கு ஏற்ப இந்த சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

## 5. சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

இங்கே இணைப்பிலுள்ளவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் அதில் குறிப்பிடப்படும் இணைப்புக்கள்.

குறிப்பு: இந்த விண்ணப்பப் படிவத்தினை சபையின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது முன் அலுவலகத்திற்கு சமூகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

## 6. ஒழுங்குமுறை.

| ஒழுங்குமுறை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் தேவைப்பாட்டினை சபையின் இணையத்தளம் ஊடாக அல்லது முன் அலுவலக உத்தியோகத்தரிடம் சமூகமளித்து சமர்ப்பித்தல் | | விண்ணப்பதாரி |
| கோரிக்கையானது சபைக்குரிய வீதியாக காணப்படின், பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தை இணையத்தளம் ஊடாக அல்லது நேரடியாகக் கையேற்றல், தொடராய்வு இலக்கமொன்றை விண்ணப்பதாரிக்கு வழங்குதல் | | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| விண்ணப்பப் படிவத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு முன்வைத்தல் | விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொண்டவுடன் | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| இடப் பரிசோதனையைச் செய்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் விண்ணப்பப் படிவத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக பொறியியலாளர்/ செயலாளருக்கு முன்வைத்தல் | விண்ணப்பப் படிவம் தனக்கு கிடைத்த திகதி முதல் 2 நாட்களினுள் | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| தொழிநுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரைக்கு ஏற்ப கோரிக்கையை அங்கீகரித்தல்/ நிராகரித்தல் | பரிந்துரை கிடைத்த திகதி முதல் ..... நாட்களினுள் | பொறியியலாளர்/ செயலாளர் |
| செலுத்த வேண்டிய கட்டண அளவினைக் குறிப்பிட்டு கோரிக்கைக்கு அனுமதியளிக்கும் கடிதத்தினை பொறியியலாளர்/ செயலாளரின் கையொப்பத்துடன் முன் அலுவலகத்திற்கு முன்வைத்தல், கோரிக்கைக்கு அனுமதியளிக்கும் கடிதத்தை வழங்குவதற்காக ஏற்புடைய கட்டணத்தைச் செலுத்துமாறு விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் | பரிந்துரை கிடைத்த திகதியிலேயே | விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |

| ஒழுங்குமுறை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| வீதியை சேதப்படுத்தி விட்டு இயல்பு நிலைக்கு மாற்றும் கட்டணத்தை அறவிட்டு பற்றுச்சீட்டு மற்றும் அனுமதிக் கடிதத்தை விண்ணப்பதாரிக்கு வழங்குதல் | விண்ணப்பதாரி சமூகமளித்த பின்பு | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| பணி முடிவுறுத்தப்பட்டது என்பதை சபைக்கு அறிவித்தல் | பணி முடிவுறுத்தப்பட்டவுடன் | விண்ணப்பதாரி |
| விண்ணப்பதாரி பணியை முடிவுறுத்திய பின்பு வீதியை இயல்பு நிலைக்கு மாற்றுதல் மற்றும் செலவின அளவினை அறிக்கையிடுதல் | விண்ணப்பதாரி பணியை முடிவுறுத்தியதாக அறிவித்த திகதியிலிருந்து ஏழு நாட்களினுள் | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| வீதியை இயல்புநிலைக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை ஏற்புடைய செலவினத் தலைப்புக்கு வைப்புச் செய்து விட்டு மீதியிருப்பின் விண்ணப்பதாரிக்குச் செலுத்துதல் | செலவின அறிக்கை கிடைத்த திகதியிலேயே | விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |

## வீதியை சேதப்படுத்துவதற்கு அனுமதி கோரல்

1. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ..........................................
2. அடையாள அட்டை இலக்கம் :. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
3. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
4. மின்னஞ்சல் முகவரி : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
5. அஞ்சல் முகவரி : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
6. வீதியை சேதப்படுத்துவதற்கான தேவைப்பாடு யாது? : நீர்க்குழாய் இடுதல் / ஏனைய: (. . . . . . . . . . . . . . . . . . . .)
8. ஏற்புடைய சேவையினை வழங்கும் நிறுவனம்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
9. சேதப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் வீதி: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
10. சேதப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் இடம் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
11. வீதியை சேதப்படுத்தும் இடத்தில் வீதி எதனைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது

    கிரவல் / தார் / காபட் / கொங்ரீட் / இடைத்தொடர்புக் கற்கள் / ஏனையவை (. . . . . . . . . . . . . . . . . . . . .)

    (வீதியை சேதப்படுத்த எதிர்பார்க்கும் இடத்திற்குச் செல்லும் வீதியின் சுருக்கக் குறிப்பொன்றை இதனுடன் இணைக்கவும்)
12. வீதியை சேதப்படுத்த எதிர்பார்க்கும் அளவு: அகலம் அடி: . . . . . . நீளம் அடி: . . . . . . ஆழம் அடி: . . . . . .
13. ஏற்புடைய சேவையை வழங்குகின்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடிதத்தின் தொடர்பிலக்கம் மற்றும் திகதி:

    தொடர்பிலக்கம்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . திகதி: 20 . . . . . . . . . . . . . . . . (பிரதியொன்றை இணைக்கவும்)

    மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துவதுடன், வீதியை சேதப்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு தயவுடன் வேண்டுகிறேன். அதற்கான நட்டங்களை ஈடு செய்வதற்கு அவசியமான பணத் தொகை எவ்வளவு என்பதை எனக்கு அறிவித்த பின்பு அதனை செலுத்துவதற்குத் தயாராக உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்பதாரியின் கையொப்பம்

விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக, தொழிநுட்ப உத்தியோகத்தர்,

பின் பக்கத்திலுள்ள கோரிக்கை தொடர்பில் உங்களது பரிந்துரையுடன் பொறியியலாளருக்கு/ செயலாளருக்கு முன்வைப்பதற்காக சமர்ப்பிக்கிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முன் அலுவலக உத்தியோகத்தர்

பொறியியலாளர்/ செயலாளர்,

* மேற்குறித்த வீதி எதனைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது:

  கிரவல் / தார் / காபட் / கொங்ரீட் / இடைத்தொடர்புக் கற்கள் / ஏனையவை (. . . . . . . . . . . . . . . . . . . .) ஆகும்.

* வீதியை சேதப்படுத்த வேண்டிய பகுதி கன மீற்றர் ................. ஆகும்.

* சேதப்படுத்திய பின்பு இயல்பு நிலைக்கு மாற்றுவதற்குத் தேவையான பொருட்களுக்கான செலவினம் ரூ............................ உம், ஈடு செய்ய வேண்டிய ஏனைய செலவினங்கள் ரூ.......................... உம், அந்த இரண்டு செலவினங்களுக்கும் அரசினால் விதிக்கப்பட்டுள்ள வரித் தொகையை சேர்த்த பின்பு மொத்தச் செலவினம் ரூ...................... ஆகும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த தொகை மற்றும் பாதுகாப்புப் பிணை வைப்புத் தொகையை செலுத்திய பின்பு வீதியை சேதப்படுத்துவதற்கு அனுமதியளிக்க பரிந்துரை செய்கிறேன்.

* இந்த வீதி .................................................... சபைக்குச் சொந்தமான வீதி அல்ல என்பதால் கோரிக்கையை நிராகரிப்பதற்குப் பரிந்துரை செய்கிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . .                    . . . . . . . . . . . . . . . . . . . . .

தொழிநுட்ப உத்தியோகத்தர்

---

விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்,

மேற்குறித்த பரிந்துரையை அங்கீகரிக்கிறேன். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை ஏற்புடைய வரிகளுடன் செலுத்துமாறு விண்ணப்பதாரிக்கு அறிவிக்கும் கடிதம் மற்றும் வீதியை சேதப்படுத்துவதற்கு அனுமதியளிக்கும் கடிதத்தினைத் தயாரித்து சமர்ப்பிக்கவும்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . .                    . . . . . . . . . . . . . . . . . . . . .

பொறியியலாளர்/ செயலாளர்

முன் அலுவலக உத்தியோகத்தர்,

கட்டணத்தை அறிவிடுமாறு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது./ அறிவிக்கும் கடிதம் அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டது. உரிய கட்டணத்தை அறவிட்ட பின்பு அனுமதியளிக்கும் கடிதத்தினை விண்ணப்பதாரிக்கு ஒப்படைக்கவும்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . .                    . . . . . . . . . . . . . . . . . . . .

விடயத்திற்குப் பொறுப்பான

உத்தியோகத்தர்